கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

அசல் வழக்கு எண்.214/2022

வா.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **பாலசுப்பையா** | தொழில் | |
| த/க பெயர் | | மதம் | |
| கிராமம் | | வயது | |
| தாலுகா | | தேதி | 17.10.2025 |

1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். பிரதிவாதி என்னிடம் பெற்றுக்கொண்ட கடனை திருப்ப பெறும் வகைக்கு நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரத்தை என் முதல் நிலை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள கேட்டுக்கொள்கிறேன். 22.10.2021 அன்று பிரதிவாதி என்னிடம் ரூ.10 லட்சம் கடனாக பெற்றுக்கொண்டு அதை திரும்ப செலுத்தும் வகைக்கு 22.12.2021 தேதியிட்டு கனரா வங்கி காசோலை அசல் தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.1** ஆகும். மேற்படி காசோலையை 22.12.2021 அன்று நான் வசூலுக்கு தாக்கல் செய்ததற்கான சேலான் தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.2** ஆகும். மேற்படி காசோலையானது பிரதிவாதியின் வங்கி கணக்கு முடிக்கப்பட்டதாக (Account Closed) என்பதற்கான வங்கி குறிப்புரை தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.3** ஆகும். 17.02.2022 தேதியிட்ட என் வழக்கறிஞர் மூலம் நான் அனுப்பிய அறிவிப்பின் நகல் அஞ்சலக ரசீதுடன் தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.4** ஆகும். மேற்படி அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டு 14.03.2022 அன்று பிரதிவாதி எனக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.5** ஆகும்.

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>** வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this

contains a full and true account of the statement Made by the witness.

G SARAN

Digitally signed by G SARAN
Date: 2025.10.17 15:39:03 +0530

Additional District and Sessions Judge(FAC),

Dindigul.